# ஹஜ்ரத் இல்யாஸ் (அ)

ஹஜ்ரத் இல்யாஸ் (அ) அவர்களை அல்லாஹ் பஃஅலபக் நகர மக்களிடையே நபியாக ஆக்கி அனுப்பியிருந்தான். பஃஅலபக் நகரம் இன்றைய லெபனான் நாட்டின் எல்லைக்குள் இருந்தது. இங்கிருந்த மக்கள் பஃஅல் எனும் ஒரு கன்றுக்குட்டியின் விக்கிரகத்தை செதுக்கிவைத்து அதனை வணங்கி வந்தார்கள். நபியவர்கள் அல்லாஹ்வின் கட்டளையால் மக்களை ஏகத்துவத்தின்பால் அழைத்து வந்தார்கள். சில மக்கள் அவர்களுடைய அழைப்பினை ஏற்றுக்கொண்டார்கள் மற்றும் அவர்களுடன் இணைந்துகொண்டார்கள். மற்றவர்கள் அவர்களுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை, மாறாக, அவர்களையே பொய்யாக்கிக்கொண்டிருந்தனர் மற்றும் அவர்களுக்கு எதிராக செயல்பட்டனர்.

அல்லாஹ் தஆலா திருக்ஃகுர்ஆனில் அவர்களைப்பற்றி وَإِنَّ إِلْيَاسَ لَمِنَ ٱلْمُرْسَلِينَ என்று குறிப்பிடுகின்றான்:

وَإِنَّ إِلْيَاسَ لَمِنَ ٱلْمُرْسَلِينَ ﴿١٢٣﴾ إِذْ قَالَ لِقَوْمِهِۦٓ أَلَا تَتَّقُونَ ﴿١٢٤﴾ أَتَدْعُونَ بَعْلًا وَتَذَرُونَ أَحْسَنَ ٱلْخَٰلِقِينَ
﴿١٢٥﴾ ٱللَّهَ رَبَّكُمْ وَرَبَّ ءَابَآئِكُمُ ٱلْأَوَّلِينَ ﴿١٢٦﴾ فَكَذَّبُوهُ فَإِنَّهُمْ لَمُحْضَرُونَ ﴿١٢٧﴾ إِلَّا عِبَادَ ٱللَّهِ ٱلْمُخْلَصِينَ
﴿١٢٨﴾ وَتَرَكْنَا عَلَيْهِ فِى ٱلْءَاخِرِينَ ﴿١٢٩﴾ سَلَٰمٌ عَلَىٰٓ إِلْ يَاسِينَ ﴿١٣٠﴾ إِنَّا كَذَٰلِكَ نَجْزِى ٱلْمُحْسِنِينَ ﴿١٣١﴾ إِنَّهُۥ مِنْ عِبَادِنَا
ٱلْمُؤْمِنِينَ ﴿١٣٢﴾

பொருள்: மேலும், இல்யாசும் நிச்சயமாக இறைத்தூதர்களில் ஒருவாக இருந்தார். அவர் தம் சமூகத்தாரிடம் இவ்வாறு கூறிய சந்தர்ப்பத்தை நினைத்துப் பாருங்கள். நீங்கள் அஞ்சுவதில்லையா? பஅலை அழைக்கின்றீர்கள், படைப்பாளர்களிலெல்லாம் மிகச் சிறந்தவனை விட்டுவிடுகின்றீர்களே. அதாவது, உங்களின் அதிபதியும் உங்ளுக்கு முன் சென்ற உங்கள் மூதாததையர்களின் அதிபதியுமான அவ்வாஹ்வை. ஆயினும், அவர்கள் அவரைப் பொய்யர் எனத் தூற்றினார்கள். ஆகையால், திண்ணமாக, அவர்கள் இப்போது தண்டனைக்காக கொண்டுவரப்படுபவர்களாய் உள்ளனர். ஆனால், வாய்மையாளர்களாய் ஆக்கப்பட்ட அல்லாஹ்வின் அடியார்களைத்தவிர. மேலும், பின்தோன்றிய தலைமுறைகளில் இல்யாசுடைய நற்புகழை நிலைப்படுத்தினோம். சாந்தி உண்டாகட்டும் இல்யாஸ்மீது, நன்மை செய்வோருக்குத் திண்ணமாக, நாம் இத்தகைய கூலியையே வழங்குகின்றோம். உண்மையில், நம்மீது நம்பிக்கை கொண்ட அடியார்களுள் ஒருவராய் அவர் திகழ்ந்தார். (அஸ்ஸாஃப்பாத்: 123-132)

* * *